**வெளியீட்டு அடிப்படை உதவி மீதான உலகளாவிய பங்குடமை (ஜீபீஓபீஏ) செயற்திட்டம் - 2012**

---

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 4,078,820 ஆகும். 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **விடயம்** | **2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** |
|---|---|
| | ரூபா |
| தளபாடம், உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் | 798,626 |
| நடைபெறும் வேலைகள் | 3,280,194 |
| மொத்தம் | 4,078,820 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வீட்டு உரிமையாளர் மட்டத்தில் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்காத ரூபா 3,280,194 கூட்டு மொத்த தொகையான விளம்பரம், ஊதியம் வாகன வாடகை மற்றும் ஏனைய நோக்கங்கள் தொடர்பில் ஏற்பட்ட கிரயம் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மானிய உடன்படிக்கை கைசாத்திடப்பட்டு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2011 திசெம்பர் 27 இல் உத்தியோகபூர்மாக தொடங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட செலவீனமாக 2011 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் செலவழிக்கப்பட்ட ரூபா 313,115 ஆன தொகை செயற்திட்ட செலவீனமாக கருதப்பட்டிருந்தது.

### 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மானிய உடன்படிக்கையின் 2.07(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டத்தின் கணக்காய்வு செய்யப்படாத இடைக்கால நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு கலண்டர் காலாண்டு இறுதியிலிருந்து குறைந்தது நாற்பத்தி ஐந்து நாட்களிற்கு பிந்தாமல் நன்கொடை முகவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியின் பின் ஆறு மாதங்களுக்கு பிந்தாமல் நன்கொடை முகவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டமானது அந்த வேண்டுகையுடன் இணங்கியிருக்காததுடன் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 17 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கல் கைநூலின் 6.4 ஆம் பந்தியின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீது கணக்காய்வு மேற்கொள்வதற்கு வேண்டப்பட்டுள்ளதுடன் நன்கொடை முகவர்களிற்கான பிரதிகளுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவருக்கு காலாண்டு செயற்திட்ட விசேட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், கொடுக்கல் வாங்கல்கள் மீதான உள்ளக கணக்காய்வு 2012 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகள் மற்றும் மானிய பெறுகைகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வழங்கப்படுவதற்கு உடன்பட்டதொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ - மானியம் | 5.08 | 660.40 | 100 | - | - |
| இலங்கை அரசாங்கம் | 3.24 | 421.20 | 50 | 2.70 | 3.06 |
| மொத்தம் | 8.32 | 1,081.60 | 150.00 | 2.70 | 3.06 |

### 4.2 பௌதீக செயலாற்றல்

வீட்டு உரிமையாளர்களிற்கு இருக்கின்ற மற்றும் புதிய கழிவகற்றும் வலையமைப்புக்களுடன் கழிவகற்றும் வீட்டு இணைப்புக்கள் மற்றும் உள்ளக சுகாதார சேவைகளின் முன்னேற்றமும் தொடர்புபட்ட எந்தவொரு நவடவடிக்கை மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் வருடாந்த மதிப்பீட்டில் இது தொடர்பில் செய்யப்பட்ட ரூபா 100 மில்லியன் தொகையான ஒதுக்கீடு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் அமுலாக்கப்பட்ட வேறு செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.